**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 131/2023**

**Deposition of P.W.** 11

Name : திரு. அருளப்பன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.02.2026

**A1. A2** present. A3 absent. Peititon filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 31.10.2019ம் தேதி திருவட்டார் காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மோசஸ் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த நிலைய குற்ற எண்.352/2019 பிரிவுகள் 379, 427 இ.த.ச படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.10.2019ம் தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நிஷா மற்றும் சுஜா ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4. பின்னர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம்

பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் சுந்தர்சிங், சுரேஷ்குமார், தாமஸ், தங்கபாய் மற்றும் ஜிஜிலெட் செலினாள் ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும், இந்த வழக்கு சம்மந்தப்பட்ட எதிரிகள் நீதிமன்றத்தில் 21.11.2019ம் தேதி ஆஜராகி ஜாமீன் பெற்று விட்டபடியால் கைது செய்யவில்லை. மேற்கொண்டு நான் அயல்பணிக்கு சென்று விட்ட படியால் இவ்வழக்கு கோப்பை எனக்கு பின்னர் வந்த காவல்உதவி ஆய்வாளர் திரு. ஞானதாஸ் அவர்களிடம் ஒப்படைத்தேன். (காவல் உதவி ஆய்வாளர்திரு. ஞானதாஸ் தற்போது இதய அறுவை சிகிச்சை செய்து சென்னையில் சிகிச்சையில் இருப்பதால் அவரால் இவ்வழக்கில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது என மருத்துவ சான்று தாக்கல் செய்யப்பட்டது). மேற்படி திரு. ஞானதாஸ் அவர்களோடு நான் பணியாற்றிய படியால் அவரது கையெழுத்துக்கள் எனக்கு பரிட்சையமானது தான். எனவே வழக்கு கோப்பின் அடிப்படையில் அவரது பங்களிப்பு குறித்து என்னால் சாட்சியம் அளிக்க முடியும். சாட்சிகள் வினுதா, மற்றும் சோபி கலா ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 10.01.2023ம் தேதியன்று மேற்படி சாட்சிகளை விசாரித்து இவ்வழக்கின் சட்டபிரிவினை பிரிவு 379, 427 இ.த.ச–வை பிரிவு 3 (1) தமிழ்நாடு பொது சொத்துக்களை சேதப்படுததுவதை தடை செய்யும் சட்டபடியாக மாற்றி சட்ட மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் சாட்சிகள் யாரும் சம்பவத்தை கண்ணால் கண்டதாக

வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எதிரிகள் சேதப்படுத்தியதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். எந்த தேதியில், எத்தனை மணிக்கு எதிரிகள் சேதப்படுத்தினார்கள் என்று வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். இண்டர்லாக் கற்கள் அமைத்த பாதை தனியார் பாதையா, பொது பாதையா என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. சம்பவ இடத்தில் இண்டர்லாக் கற்கள் எதுவும் இல்லை. சேதப்படுத்தப்பட்ட கற்கள் குறித்து அரசு பொறியாளரை விசாரித்து சேத மதிப்பு பெறவில்லை. பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் சேதம் என்று எழுதி அதை அடித்து விட்டு சேகரிக்கப்பட வேண்டிய தடயங்கள் எதுவும் இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகள் பொது சொத்து எதையும் சேதப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. தவறான தகவலின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டதுஎன்றால் சரியல்ல.